ஜும்ஆ பிரசங்கம்

# அளவற்ற அருளாளன் அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான்

**26 துல் ஹஜ் 1447 ஹிஜ்ரி- 12 / 6 / 2026 கி.பி**

நிச்சயமாக அனைத்துப் புகழும் அல்லாஹ்விற்கே உரியது. நாம் அவனைப் புகழ்கிறோம்; அவனிடமே உதவியும் தேடுகிறோம்; அவனிடமே பாவமன்னிப்பும் கோருகிறோம். மேலும், நமது உள்ளங்களின் தீமைகளிலிருந்தும், நமது தீய செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். அல்லாஹ் எவரை நேர்வழிப்படுத்துகிறானோ அவரை வழிகெடுப்பவர் எவருமில்லை; எவரை அவன் வழிகேட்டில் விடுகிறானோ அவரை நேர்வழிப்படுத்துபவர் எவருமில்லை. மேலும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்றும், நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.

**"நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்."** [அல்குர்ஆன் 3 : 102]

**அதன் பிறகு முஸ்லிம்பெருமக்களே!**

நிச்சயமாக ஈமானை (நம்பிக்கையை) அதிகமாக்குவதிலும், யகீனை (உறுதியை) வலுப்படுத்துவதிலும் உள்ளவை எவையெனில், அல்லாஹ்வின் பிரபஞ்ச படைப்புகளைப் பற்றி சிந்திப்பதும், அவனது மார்க்க வசனங்களை ஆராய்ந்து பார்ப்பதுமாகும். ஏனெனில் படைப்புகளின் மகத்துவமும், அவற்றின் அழகிய அமைப்பும், படைப்பாளனின் மகத்துவத்திற்கும் அவனது அரிய கலைவண்ணத்திற்கும் சான்றாகத் திகழ்கின்றன. அல்லாஹ் கூறுகிறான்.

**"நிச்சயமாக வானங்கள் மற்றும் பூமியின் படைப்பிலும், இரவு மற்றும் பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன."** [அல்குர்ஆன் 3 : 190].

மேலும் படைப்புகளிலேயே மிக மகத்தான ஒன்று, கண்ணியமும் உயர்வும் மிக்க ரப்பின் 'அர்ஷ் எனும் ' (சிம்மாசனம்) ஆகும். அல்லாஹ் அதனைப் பற்றிக் கூறும்போது: **"அவனுடைய சிம்மாசனமானது வானங்களையும் பூமியையும் உள்ளடக்கியுள்ளது"** [அல்குர்ஆன் 2 : 255] என்று வர்ணித்துள்ளான். மேலும் சிம்மாசனம் என்பது அல்லாஹ்வுடைய இரு பாதங்கள் வைக்கும் இடமாகும். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள்: (சிம்மாசனம் என்பது அவனது இரு

பாதங்கள் வைக்கும் இடமாகும், அர்ஷின் அளவையோ எவராலும் மதிப்பிட முடியாது) [இதனை இமாம் ஹாகிம் (ரஹ்) அவர்கள் அறிவித்து, ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்கள், இமாம் தஹபி(ரஹ்) அவர்களும் இதில் உடன்பட்டுள்ளார்கள்]. இதைக் கொண்டே அல்லாஹ்வின் வேதத்தில் உள்ள மிக மகத்தான வசனத்திற்கு (ஆயத்துல் குர்ஸி என்று) பெயரிடப்பட்டுள்ளது. உபை பின் கஅப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"அபூ முன்திரே! உம்மிடமுள்ள அல்லாஹ்வின் வேதத்தின் வசனங்களில் மிகவும் மகத்தானது எது என்று உமக்குத் தெரியுமா?"** நான் கூறினேன்: "அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கறிந்தவர்கள்." மேலும் நபியவர்கள் கூறினார்கள். **"அபூ முன்திரே! உம்மிடமுள்ள அல்லாஹ்வின் வேதத்தின் வசனங்களில் மிகவும் மகத்தானது எது என்று உமக்குத் தெரியுமா?"** நான் கூறினேன்: (அல்லாஹு லா இலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம்) "அல்லாஹ், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, அவன் என்றும் உயிருடன் இருப்பவன், பிரபஞ்சத்தை நிர்வகிப்பவன் என்றேன்." உடனே நபியவர்கள் எனது நெஞ்சில் தட்டிவிட்டு, **"அல்லாஹ்வின் மீதாணையாக! அபூ முன்திரே! உமக்கு இந்த அறிவு வாழ்த்துக்குரியதாகட்டும் (இனிமையாகட்டும்)"** என்று கூறினார்கள். [நூல் : முஸ்லிம்]

**அல்லாஹ்வின் அடியார்களே!**

கண்ணியமும் உயர்வும் மிக்க ரப்பின் சிம்மாசனம் இவ்வளவு பெரிய மகத்துவத்தை அடைந்து, ஏழு வானங்களையும் பூமிகளையும் சூழ்ந்திருக்குமேயானால், நமது ரப் அவனது கண்ணியத்திற்கும் மகத்துவத்திற்கும் தகுந்தவாறு அதன் மீது உயர்ந்துவிட்டானே அந்த ரஹ்மானுடைய அர்ஷ் (சிம்மாசனம்), அதைவிடப் பெரியதும் மிக மேலானதுமாகும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகிறான்: **"அளவற்ற அருளாளன் அர்ஷின் மீது உயர்ந்துவிட்டான்"** [அல்குர்ஆன் 20 : 5] . மேலும் அல்லாஹ் கூறுகிறான்: **"அவன்தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; அவனது அர்ஷ் தண்ணீரின் மீது இருந்தது"** [அல்குர்ஆன் 11 : 7] . அல்லாஹ் தனது அர்ஷைப் பற்றி தனது வேதத்தில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளான். அதனை மகத்துவமிக்கது என வர்ணித்து: **"அல்லாஹ், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை; அவன் மகத்தான அர்ஷின் அதிபதி"** [அல்குர்ஆன் 27 : 26] என்று கூறினான். மேலும் மிக உயர்ந்த, மிக மேலான பண்புகளை உள்ளடக்கிய கண்ணியமிக்கது என வர்ணித்து: **"உண்மையான அரசனாகிய அல்லாஹ் மிகவும் உயர்ந்தவன், வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு நாயனில்லை; அவன் கண்ணியமிக்க அர்ஷின் ரப் (அதிபதி) ஆவான்."** [அல்குர்ஆன் 23 : 116].

கண்ணியமிக்க தூதர் (ஸல்) அவர்கள் அர்ஷின் அளவைப் பற்றியும், அது பிரம்மாண்டமான வடிவம் கொண்டது என்றும் அறிவித்துள்ளார்கள். அபூதர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"அபூதரே! ஏழு வானங்களும் அர்ஷோடு ஒப்பிடும்போது, ஒரு பரந்த பாலைவனத்தில் தூக்கி எறியப்பட்ட ஒரு சிறிய வளையத்தைப் போன்றதே தவிர வேறில்லை. மேலும், சிம்மாசனத்தை விட அர்ஷின் சிறப்பானது, அந்த வளையத்தை விட அந்தப் பாலைவனத்தின் சிறப்பைப் போன்றதாகும்."** [இதனை இப்னு ஹிப்பான் தனது ஸஹீஹில் அறிவித்துள்ளார்].

மேலும் அர்ஷ் என்பது படைப்புகளின் கூரையாகும். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் உள்ளவாறு, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"நீங்கள் அல்லாஹ்விடம் கேட்கும்போது, ஃபிர்தவ்ஸ் எனும் சுவனத்தைக் கேளுங்கள். ஏனெனில் அதுதான் சுவனத்தின் நடுப்பகுதியும், சுவனத்தின் மிக உயர்ந்த பகுதியுமாகும். அதற்கு மேலே ரஹ்மானின் அர்ஷ் உள்ளது, அங்கிருந்தே சுவனத்தின் ஆறுகள் பாய்ந்தோடுகின்றன."** [புகாரி].

மேலும் அது படைப்புகளிலேயே மிகக் கனமானது ஆகும். ஹதீஸில் வந்துள்ளது: **"அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்; அவனது படைப்புகளின் எண்ணிக்கையளவும், அவன் திருவுள்ளம் உவக்குமளவும், அவனது அர்ஷின் எடையளவும், அவனது வார்த்தைகளின் எழுதுகோல் மை அளவும் துதிக்கிறேன்."** [ஜுவைரியா (ரழி) அவர்கள் அறிவித்த இந்த ஹதீஸை முஸ்லிம் பதிவு செய்துள்ளார்]. ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: **"அர்ஷின் எடைதான் எடைகளிலேயே மிகக் கனமானது என்பதை இது தெளிவுபடுத்துகிறது."**

**அல்லாஹ்வின் அடியார்களே!**

நிச்சயமாக அல்லாஹ் அர்ஷுக்கு அது தாங்கி நிற்பதற்கான தூண்களை (கால்களை) அமைத்துள்ளான். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"மூசாவை விட என்னை சிறந்தவராக்க வேண்டாம்; ஏனெனில் (மறுநாளில்) மனிதர்கள் அனைவரும் மூர்ச்சையாகி விழுவார்கள். அப்போது முதன்முதலில் உயிர்த்தெழுபவனாக நான் இருப்பேன். நான் உயிர்த்தெழுந்து பார்க்கும்போது, மூஸா அர்ஷின் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பார். அவர் மூர்ச்சையாகி விழுந்து எனக்கு முன்பே உயிர்த்தெழுந்தாரா, அல்லது அல்லாஹ் விதிவிலக்கு அளித்தவர்களில் அவரும் ஒருவரா என்று எனக்குத் தெரியாது."** [புகாரி, முஸ்லிம்].

மேலும் அல்லாஹ் அதனைச் சுமப்பதற்காக கண்ணியமிக்க வானவர்களைப் பொறுப்பாக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: **"அந்நாளில் உமது ரப்பின் அர்ஷை அவர்களுக்கு மேல் எட்டு வானவர்கள் சுமப்பார்கள்"** [அல்குர்ஆன் 69 : 17]. அந்த வானவர்களின் படைப்பின் பிரம்மாண்டத்தை அல்லாஹ்வைத் தவிர வேறு

யாரும் அறிய முடியாது. அல்லாஹ் கூறுகிறான்: "**அர்ஷைச் சுமந்து கொண்டிருப்பவர்களும், அதைச் சுற்றியிருப்பவர்களும் தங்கள் ரப்பின் புகழைக் கொண்டு துதிக்கிறார்கள்; அவனையே நம்புகிறார்கள்; மேலும் நம்பிக்கை கொண்டோருக்காகப் பாவமன்னிப்புத் தேடுகிறார்கள்"** [அல்குர்ஆன் 40 : 7]. ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"அர்ஷைச் சுமக்கும் அல்லாஹ்வின் வானவர்களில் ஒருவரைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவரது காது மடலிலிருந்து அவரது தோள்பட்டை வரை உள்ள தூரம் எழுநூறு ஆண்டுகள் பயணிக்கக் கூடிய தூரமாகும்."** [இதனை அபூதாவூத் அறிவித்துள்ளார், அல்பானி அவர்கள் இதனை ஸஹீஹ் என வகைப்படுத்தியுள்ளார்].

**முஸ்லிம்களே!**

மேலும் அல்லாஹ் தனது அர்ஷுக்குப் பல சிறப்பம்சங்களை பிரத்தியேக மாக்கியுள்ளான், மகத்தான பண்புகளால் அதனைக் கண்ணியப்படுத்தி யுள்ளான். அதில் ஒன்று: அல்லாஹ் ஒரு உடன்படிக்கையை (வாக்குறுதியை) எழுதி, அதனை உறுதிப்படுத்துவதற்காகவும் வலியுறுத்துவதற்காகவும் அர்ஷுக்கு மேலே வைத்துள்ளான். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "**நிச்சயமாக அல்லாஹ் படைப்புகளைப் படைப்பதற்கு முன்பே ஒரு ஏட்டை எழுதினான்: 'நிச்சயமாக எனது ரஹ்மத் (கருணை) எனது கோபத்தை முந்திவிட்டது' என்று. அது அவனிடம் அர்ஷுக்கு மேலே எழுதப்பட்டுள்ளது."** [புகாரி].

**மேலும் அல்லாஹ் அர்ஷுக்கு வழங்கிய தனிச்சிறப்புகளில் ஒன்று**: அவன் ஷுஹதாக்களின் (உயிர்த்தியாகிகளின்) ஆன்மாக்கள் அர்ஷில் தொங்கவிடப்பட்டுள்ள விளக்குகளில் வந்து தங்கிச் செல்லுமாறு ஆக்கியுள்ளதாகும். அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஷுஹதாக்களைப் பற்றிக் கூறினார்கள்: **"அவர்களுடைய ஆன்மாக்கள் பச்சைப் பறவைகளின் உடம்பிற்குள் இருக்கும். அவற்றுக்காக அர்ஷில் விளக்குகள் தொங்கவிடப்பட்டிருக்கும். அவை சுவனத்தில் தாங்கள் நாடிய இடமெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு, பிறகு அந்த விளக்குகளுக்குத் திரும்பி வந்து தங்கும்."** [முஸ்லிம்].

எனவே அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்; அவன் உண்மையான அரசன், மிக உயர்ந்தவன், கண்ணியமும் பெருமையும் மிக்கவன், பெருமிதமும் மகத்துவமும் உடையவன்.

மகத்தான குர்ஆனைக் கொண்டு அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக! அதிலுள்ள வசனங்கள் மற்றும் ஞானமிக்க உபதேசங்களைக் கொண்டு எனக்கும் உங்களுக்கும் பயனளிப்பானாக! எனது இந்த வார்த்தையைக் கூறி, எனக்காகவும் உங்களுக்காகவும் அனைத்துப் பாவங்களுக்காகவும்

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன், அவனிடமே மீளுகிறேன். எனவே அவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள், அவன்பால் தவ்பா செய்யுங்கள். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனாகவும், அளவற்ற கருணையாளனாகவும் இருக்கிறான்.

## இரண்டாவது பிரசங்கம்

அனைத்துப் புகழும் அகிலங்களின் ரப்பாகிய அல்லாஹ்விற்கே உரியது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்று சாட்சி கூறுகிறேன். மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன். அல்லாஹ் அவர்தம்மீதும், அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் அனைவர் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் பொழிவானாக!

**இதற்குப் பின்னால்,**

எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்வை அஞ்சுமாறு (தக்வாவைக் கொண்டு) உபதேசம் செய்கிறேன். ஏனெனில் எவர் அல்லாஹ்வை அஞ்சுகிறாரோ, அவரை அவன் பாதுகாப்பான், அவரைப் பாவங்களிலிருந்து காத்து, அவருக்குப் புகலிடம் அளிப்பான். அல்லாஹ் கூறுகிறான்:

**"நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்தால், அவன் உங்களுக்கு (நன்மை தீமையைப் பிரித்தறியும்) ஒரு விவேகத்தை அளிப்பான்; உங்கள் தீமைகளை உங்களை விட்டும் போக்கி, உங்களை மன்னிப்பான்; அல்லாஹ் மிக மகத்தான அருளுடையவன்."** [அல்குர்ஆன் 8 : 9].

**முஸ்லிம்களே!**

இறைவன் தன் வேதத்தில் தெளிவாகக் கூறியுள்ள, மேலும் நபியின் ஹதீஸ்கள் மூலம் தொடர்ச்சியாக வந்துள்ள, அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅத்தினர் அனைவரும் ஏகோபித்து முடிவெடுத்துள்ள (இஜ்மாஃ செய்துள்ள) ஒரு விஷயம் என்னவென்றால், அல்லாஹ் அர்ஷின் மீது 'இஸ்தவா' செய்துள்ளான். அதாவது, அவன் அவனது கண்ணியத்திற்குத் தகுந்தவாறு உயர்ந்துவிட்டான், அது படைப்புகளின் உயர்வைப் போன்றதல்ல. அல்லாஹ் கூறுகிறான்: **"அவனைப் போன்று எப்பொருளும் இல்லை; அவன் யாவற்றையும் செவியுறுபவன், பார்ப்பவன்."** [அல்குர்ஆன் 42 : 11].

எனவே அல்லாஹ் தன் அர்ஷின் மீது உயர்ந்திருக்கிறான், அவனது அர்ஷ் அவனது படைப்புகளுக்கு மேலே வானத்தில் உள்ளது. இமாம் அவ்ஸாயீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: (நாங்களும், தாபியீன்கள் பலரும் அதிகமாக இருந்த காலத்தில் கூறி வந்தோம்: நிச்சயமாக வல்லமையும் கண்ணியமும் மிக்க அல்லாஹ் அவனது அர்ஷுக்கு மேலே இருக்கிறான், மேலும் சுன்னாவில் அவனது பண்புகளைப் பற்றி வந்துள்ள அனைத்தையும் நாம் ஈமான் கொள்கிறோம்).

இதுவே இந்த உம்மத்தின் ஸலஃபுகளின் (முன்னோர்களின்) மற்றும் சிறந்தோர்களின் கொள்கையாகும். இதன்படியே நான்கு இமாம்களும் வழிநடந்தனர். இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: (அல்லாஹ்வுக்கு அர்ஷின் தேவை ஏதும் இல்லாமலேயே, அவன் அர்ஷின் மீது உயர்ந்தான் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம்).

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம்: (அவன் எவ்வாறு உயர்ந்தான்? எனக் கேட்கப்பட்ட போது, அவர் கூறினார்: அவன் உயர்வது என்பது (வேதத்தில் உள்ளதால்) அறியப்பட்டது, ஆனால் அது எப்படி என்ற விபரம் மனித அறிவுக்கு எட்டாதது, இதைப் பற்றிக் கேள்வி கேட்பது பித்அத் (மார்க்கத்தில் புதுமை) ஆகும்) என்று கூறினார்.

இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: (நான் எந்த சுன்னாவின் கொள்கையில் இருக்கிறேனோ, மேலும் ஸுஃப்யான், மாலிக் போன்ற நான் கண்ட அறிஞர்கள் எதன் மீது இருந்ததைக் கொண்டேனோ, அந்த சுன்னாவின் கூற்றாவது: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சான்று பகர்வதும், மேலும் அல்லாஹ் அவனது வானத்தில் அவனது அர்ஷின் மேல் இருக்கிறான் என்பதை ஒப்புக் கொள்வதுமாகும்).

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.(நிச்சயமாக ஏழு வானங்களுக்கு மேலே, குர்ஸி, அர்ஷ் மற்றும் லவ்ஹுல் மஹ்ஃபூள் ஆகியவை உள்ளன என்பதை கல்விமான்கள் அறிந்து வைத்துள்ளனர்).

எனவே, குர்ஆன் மற்றும் சுன்னாவைப் பலமாகப் பற்றிக் கொண்டு, அல்லாஹ் தன்னை எவ்வாறு வர்ணித்துக் கொண்டானோ, அவனது தூதர் அவனைப் பற்றி என்ன அறிவித்தாரோ அதை அப்படியே ஈமான் கொண்டு, நபியும் அவர்தம் தோழர்களும் இருந்த வழியை எவ்வித மாற்றமும் (தஹ்ரீஃப்), மறுப்பும் (தஃதீல்), எவ்வித உருவகப்படுத்துதலும் (தக்யீஃப்) மற்றும் உவமை கூறுதலும் (தம்ஸீல்) இன்றி உறுதியாகப் பற்றிப் பிடித்தவரே பாக்கியசாலி ஆவார்.

யா அல்லாஹ்! ஒளிவீசும் முகமும் பிரகாசமான நெற்றியும் கொண்டவரான முஹம்மது பின் அப்துல்லாஹ் அவர்களின் மீதும், மேன்மைமிக்க அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிவாயாக! மேலும் மஹ்ஷர் நாள் வரை அவர்களின் நேர்வழியைப் பின்பற்றி நடப்பவர்கள் மீதும் சாந்தி பொழியட்டும்.

யா அல்லாஹ்! முஸ்லிம்களான ஆண்களையும் பெண்களையும், அவர்களில் உயிருடன் இருப்பவர்களையும், மரணித்தவர்களையும் மன்னிப்பாயாக! எங்கள் ரப்பே! எங்களை விட்டும் சோதனைகளையும், கொள்ளை நோய்களையும், வறுமையையும், துன்பங்களையும் நீக்குவாயாக! எங்களுக்கு உன் அருட்கொடைகளைத் தொடரச் செய்வாயாக! எங்களை விட்டும் அழிவுகளைத் தடுப்பாயாக! எங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துவாயாக, நீயே

தூய்மைப்படுத்துபவர்களில் மிகச் சிறந்தவன். எங்கள் ரப்பே! எங்களுக்கு இம்மையிலும் நன்மையைத் தந்து, மறுமையிலும் நன்மையைத் தந்து, எங்களை நரக வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக! யா அல்லாஹ்! குவைத்தையும் அதன் மக்களையும் அனைத்துத் தீமைகள் மற்றும் சங்கடங்களிலிருந்தும் பாதுகாப்பாயாக! இந்நாட்டையும் மற்ற அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! எல்லையில் காவல் புரியும் எங்கள் சகோதரர்களையும், பாதுகாப்புப் படையினர், இராணுவம், தேசியக் காவல் படையினர் மற்றும் நாட்டின் பாதுகாப்பிற்காகப் பாடுபடும் அனைவரையும் பாதுகாப்பாயாக! அவர்களின் பாதங்களை (களத்தில்) உறுதிப்படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்களது அமீருக்கும் அவரது வாரிசான துணை அமீருக்கும் நீ எதனை நேசித்து திருப்தியடைகிறாயோ அதன்பால் தவ்ஃபீக் செய்வாயாக! அவர்கள் இருவரின் கரங்களையும் நன்மையின் பக்கமும் தக்வாவின் பக்கமும் திருப்புவாயாக! எங்களின் இறுதிப் பிரார்த்தனையானது அனைத்துப் புகழும் அகிலங்களின் ரப்பாகிய அல்லாஹ்விற்கே உரியது என்பதாகும்.

வெள்ளிக்கிழமை தொழுகைக்கான மாதிரிப் பிரசங்கத் தயாரிப்புக் குழு.